**அசல் வழக்கு எண். 172/18 வா.சா.1 திரு.கருப்பையா த/பெ.சீனிவாசன்**

**தேதி: 03.11.2022.**

## பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வெண்ணாவல்குடி தெற்கு அக்ரஹாரத்திலுள்ள புல எண் 852/30 ல் கண்டுள்ள இடம் அரசால் எனக்கு வழங்கப்பட்டது. அந்த இடத்திற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விபரத்திற்கான ஆவணத்தினை எனது தரப்பில் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன் குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்பது எனக்கு தெரியவில்லை. எவ்வளவு பரப்பளவு உள்ள இடத்திற்கு நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1 ஏர்ஸ் இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் நான்கெல்லை எனக்கு தெரியும். வழக்கு சொத்தின் வடக்கே அரசு புறம்போக்கு இடமும் தெற்கே எனது அம்மா பொன்னம்மாளின் இடமும் மேற்கே மு.கணேசன் என்பவரது இடமும் கிழக்கே அரசு புறம்போக்கும் உள்ளது. வழக்கு சொத்து வருவாய் ஆவணங்களில் எந்தவகையான சொத்து என வகைப்படுத்தப்பட்டுள்ள என்ற விபரம் தெரியுமா என்றால் நத்தம் புறம்போக்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)